பக்கங்கள்: 08

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 10 செவ்வாய்க்கிழமை 23.03.2021 கதிர் 06

## அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் திடீர் இராஜினாமா!



அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நாலக கலுவேவ தனது பதவியை திடீரென இராஜிநாமா செய்துள்ளார்.

தனிப்பட்ட காரணத்தாலேயே அவர் தனது பதவியை இராஜிநாமா ☞ 2

# ஜெனிவா தீர்மானம் நிறைவேற்றம்: 22 நாடுகள் ஆதரவு; எதிர்த்தவை –11

### இந்தியா உட்பட 14 நாடுகள் நடுநிலைமை



ஜெனிவா, மார்ச் 23

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானம் இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46 ஆவது அமர்வில் பிரிட்டன் தலைமையிலான 6 நாடுகள் இலங்கைக்கு எதிராக முன்வைத்த தீர்மானமே இவ்வாறு வெற்றியடைந்துள்ளது.

இலங்கை மீதான தீர்மானத்துக்கு ஆதரவாக 22 நாடுகளும், எதிராக 11 நாடுகளும் வாக்களித்துள்ளன.

இந்தியா, ஜப்பான் உட்பட 14 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. ☞ 2

## காடழிப்பு நடவடிக்கைகளை உடன் நிறுத்தக் கோரி எதிரணியினர் நாடாளுமன்ற வீதியில் ஆர்ப்பாட்டம்

### நாளை விகாரமகாதேவி பூங்காவில் மாபெரும் போராட்டம்



இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் காடழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று அமைதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் பத்தரமுல்லை நாடாளுமன்ற வீதியில் நடத்தப்பட்டது.

நாட்டில் இடம்பெற்று வரும் காடழிப்பு நடவடிக்கைகள் அரசின் இயலாமையைக் காட்டுகின்றது ☞ 2

## இலங்கையின் சொத்தான கச்சதீவை இந்தியாவுக்குத் தாரைவார்க்கோம்!

### ராஜபக்ஷ அரசு திட்டவட்டம்

யாழ்ப்பாணத்துக்கு அருகிலுள்ள கச்சதீவு இலங்கைக்கே சொந்தமானது. கச்சதீவு ஒப்பந்தத்தில் இது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எக்காரணம் கொண்டும் இந்தத் தீவை இந்தியாவுக்குத் தாரைவார்க்க மாட்டோம்.

- இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இந்தியாவின் மத்திய கப்பல் மற்றும் தரைவழிப் போக்குவரத்துத்துறை இணை அமைச்சர் வி.கே.சிங், கச்சதீவை இலங்கையிடமிருந்து மீளப்பெறுவது தொடர்பில் ஆலோசித்து வருகின்றோம் என்று அண்மையில் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் ஊடகங்களிடம் அமைச்சர் விமல் வீரவன்ஸ ☞ 2

## தலவாக்கலையில் கோர விபத்து: யுவதி பரிதாபச் சாவு; தாய் காயம்



தலவாக்கலை - சென்.கிளயார் - டெவோன் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தின் யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து இன்று அதிகாலை 5.20 மணியளவில் இடம்பெற்றது எனத் திம்புள்ளை பத்தனைப் ☞ 2

## நாடு திரும்பிய இலங்கையர்கள் 40 பேருக்குக் கொரோனா உறுதி

இன்று காலை வரையான கடந்த 24 மணி நேரங்களில் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பிய 40 இலங்கையர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இன்று காலை 6 மணி வரையான 24 மணி நேரங்களில் இலங்கையில் மொத்தம் 314 பேருக்குக் ☞ 2

## மாகாண சபை முறையை ஒழிக்குமாறு அமைச்சரவையிலும் வலியுறுத்துவேன்

### சரத் வீரசேகர சண்டித்தனம்



மாகாணசபைமுறைமைஒழிக்கப்படவேண்டும் என்ற எனது நிலைப்பாடு ஒருபோதும் மாறாது. அதற்காகத் தொடர்ந்தும் குரல் கொடுப்பேன். அமைச்சரவையிலும்கருத்துகளைமுன்வைப்பேன்.

- இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ☞ 2

## வடக்கு, கிழக்கு அதிபர், ஆசிரியர்களுக்கு மன அழுத்தம்!

### இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கவலை

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றுகின்ற பெருமளவான அதிபர்கள், ஆசிரியர்கள் மன அழுத்தங்களுக்கு உட்படுத்தப்படுகின்றமையோடு அதனால் தீராத நோய்கள் ஏற்பட்டு மரணங்களும் நிகழ்கின்றன.

- இவ்வாறு சுட்டிக்காட்டி கவலை வெளியிட்டுள்ளது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம். சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவை வருமாறு:-

01. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பாடசாலைகளுக்கான அதிபர் நியமனம், ஆசிரிய நியமனம் என்பவற்றில் பல்வேறு குளறுபடிகள் நடைபெறுகின்றன.

பாடசாலைகளின் தரத்திற்கு ஏற்ப அதிபர்கள் நியமிக்கப்படுகின்றார்கள் இல்லை. வெற்றிடங்களை நிரப்புவதும் இல்லை. அதிபர் சேவை தரம் 1இல் ☞ 2

## மாகாண சபை முறையை ஒழிக்குமாறு ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

மாகாணசபைமுறைமைக்கு அமைச்சர் சரத் வீரசேகர கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றார். ஆனாலும், மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. இது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாகாண சபை முறைமையை ஒழிப்பேன் என நான் கூறவில்லை. அம்முறைமைக்கு எதிரானவன் நான். எனவே, குறித்த முறைமையை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமானால் அதற்கு முழு ஒத்துழைப்பையும் வழங்குவேன்.

மாகாணசபைமுறைமைதொடர்பில் நாடாளுமன்றம்தான் முடிவெடுக்க வேண்டும். இந்த விவகாரம் தொடர்பில் அமைச்சரவையில் கலந்துரையாடும் போது எனது கருத்துக்களை முன்வைப்பேன். மாகாண சபை முறைமை தொடர்பான எனது எதிர்ப்பு ஒருபோதும் மாறாது - என்றார்.

அதேவேளை, புர்காதடைதொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர்,

அதற்கான அமைச்சரவைப் பத்திரத்தில் கையொப்பமிட்டுள்ளேன். முன்கூட்டியே ஒதுக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படையிலேயே அமைச்சரவைக்குப் பத்திரம் வரும். அந்தவகையில்தான் தாமதம் ஏற்பட்டுள்ளது. எனினும், ஓரிரு வாரங்களில் அமைச்சரவைக்குக் குறித்த பத்திரம் நிச்சயம் வரும் - என்றார்.

## வடக்கு, கிழக்கு அதிபர், ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உள்ளவர் தரம் III பாடசாலையிலும், அதிபர் சேவைத்தரம் 3இல் உள்ளவர் 1ஏபிபாடசாலையிலும் கடமையாற்றுகின்றார். பெருமளவான கஸ்ட, அதிகஸ்ட பிரதேசபாடசாலைகளில் அதிபர் சேவையில் உள்ளவர்கள் கடமையில் இல்லை. மாறாக சேவைக் கொடுப்பனவுகள் ஏதுமின்றி ஆசிரியர்களே அதிபர் கடமையில் உள்ளனர்.

ஆசிரிய நியமனங்கள் எவையும் நியாயமாக நடைபெறுவதில்லை. ஒரு சில இடங்களில் தேவைக்கு அதிகமாக ஆசிரியர்கள் உள்ளனர். கஷ்ட, அதிகஷ்ட பிரதேச பாடசாலைகளில் அவசியமான பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை. வடக்கு மாகாணத்தில் அனைத்து வலயங்களிலும் ஆசிரியர்கள் மேலதிகம். மாறாக ஆசிரிய ஆளணிக்குப் பொருத்தமில்லாமலும் சீர்செய்யப்படாமலும் உள்ளனர்.

02. ஆசிரிய இடமாற்றங்கள் ஏனைய மாகாணங்களைவிட வடக்கு, கிழக்கில் அதிகாரத்தில் உள்ளவர்களின் விருப்பப்படியே நடைபெறுகின்றன. கிழக்கு மாகாணத்தில் வலயங்களுக்கு இடையிலான ஆசிரிய இடமாற்றம் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களின் பதவி மோகத்தால் பல ஆண்டுகள் நடைபெறவில்லை.

03. வடக்கு மாகாணத்தில் அரச சுற்று நிருபத்துக்கு 2007/20) மாறாக மேன்முறையீடுகள் எதனையும் ஏற்காமல் தாம் சொல்லும் இடத்துக்குச் செல்ல வேண்டும் என்ற உத்தரவு. ஒரு பாடசாலையில் ஒரு பாடத்துக்கு ஒரேயொரு ஆசிரியர் இருந்தால் அவருக்கும் இடமாற்றம். அவர் இடமாற்றம் செய்யப்பட்ட இடத்தில் ஆசிரியர்கள் மேலதிகம். பின்னர் நேரசூசிகை இல்லாதவர்களின் வேதனம் நிறுத்துவதாக அச்சுறுத்தல். இதற்கு கணக்காய்வுத் திணைக்களம் சாட்டு.

04. ஏழு ஆண்டுகளுக்கு மேல் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு நேரசூசிகை வழங்கக்கூடாது என கல்விப்பணிப்பாளர் கட்டளை. அவர்கள் இன்னுமொரு பாடசாலைக்கு மேலதிக ஆளணியாக அதிரடி இடமாற்றம். கடிதம் வரும். மேன்முறையீடு செய்யாமல் கடமையேற்கவேண்டும் என்ற கட்டளை.

இவை போன்ற ஏராளமான விடயங்களால் அதிபர்களும், ஆசிரியர்களும் மன அழுத்தங்களுக்கு உட்பட்டு சேவையில் இருந்து இடைவிலகுவதும், முன்னரே ஓய்வுபெறுவதும், நோய்வாய்ப்படுவதும், மரணிப்பதும் வடக்கு, கிழக்கில் சாதாரணமாகிவிட்டது.

தற்போதைய நிலையில் ஏனைய மாகாணங்களை விட வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பின்னிலையில் இருப்பதற்கு இதுவே மூல காரணம்.

ஆசிரிய தொழில் பிற தொழில்கள் போன்றதல்ல. மனமகிழ்ச்சியுடன் செய்யவேண்டிய தொழில்.

அதிகாரங்களைப் பயன்படுத்தி கருமமாற்றுவது இந்தத் தொழிலுக்குப் பொருந்தாது - என்றுள்ளது.

## நாடு திரும்பிய .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது. இவர்களில் 40 பேர் வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பியவர்கள் எனவும் சுகாதார அதிகாரிகள் கூறியுள்ளனர்.

உள்நாட்டில் 274 பேருக்குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இவர்களில் அதிகளவானவர்கள் திருகோணமலை மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர்.

நேற்று தொற்று உறுதியானவர்களில் 52 பேர் திருகோணமலையைச் சேர்ந்தவர்கள். இதனைவிட களுத்துறையில் 30 பேருக்கும், கம்பஹாவில் 29 பேருக்கும் தொற்று உறுதியானது.

நேற்று மொத்தம் 5 ஆயிரத்து 983 பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் 314 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

புதிய தொற்று நோயாளர்களுடன் இலங்கையில் பதிவான கொரோனாத் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை 90 ஆயிரத்து 513 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 87 ஆயிரத்து 57 பேர் குணமடைந்துள்ளனர். 551 பேர் உயிரிழந்துள்ளனர்.

2 ஆயிரத்து 905 பேர் தொடர்ந்தும் கொரோனா சிகிச்சை மையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நாடு முழுவதும் அமைந்துள்ள 102 தனிமைப்படுத்தல் மையங்களில் தற்போது 10 ஆயிரத்து 692 பேர் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## காடழிப்பு நடவடிக்கை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எனவும், காடழிப்பு நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

காடழிப்புக்கு எதிராக நாளை கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் மாபெரும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

## தலவாக்கலையில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொலிஸார் தெரிவித்தனர்.

லொறி ஒன்றும், ஓட்டோ ஒன்றும் மோதுண்டே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

நுவரெலியாவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த சுகாதார அமைச்சுக்குச் சொந்தமான லொறியும், கொழும்பிலிருந்து நானுஓயா நோக்கிப் பயணித்த ஓட்டோவுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்தில் ஓட்டோவில் பயணித்த யுவதியே உயிரிழந்துள்ளார். உயிரிழந்த யுவதியின் தாய் படுகாயமடைந்துள்ளார்.

மேலும், ஓட்டோ சாரதிக்கு எந்தவித காயங்களும் ஏற்படவில்லை எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்தில் உயிரிழந்த 25 வயதான கணேசன் நித்யாவின் சடலம், கொட்டகலை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

ஓட்டோ சாரதிக்கு நித்திரை ஏற்பட்டமையே இந்த விபத்துக்கான காரணமாக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இவ்விபத்து தொடர்பில் ஓட்டோ சாரதியும், லொறியின் சாரதியும் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை திம்புள்ளை பத்தனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அரச தகவல் திணைக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செய்துள்ளார் என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இன்று தெரிவித்தார்.


**ஒடியல் மா தேவை**
ஒடியல் மா மொத்தமாக கொள்வனவிற்கு தேவை.
தொடர்புகளுக்கு 076 403 814

**பனங்கிழங்கு தேவை**
பனங்கிழங்கு மொத்த கொள்வனவுக்கு தேவை.
தொடர்புகளுக்கு 076 011 7002

**விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம்- 076 443 8622**


## இலங்கையின் சொத்தான கச்சதீவை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அன்று இந்தியாவின் ஓர் அங்கமாக இருந்த கச்சதீவை, இந்திய மத்திய அரசு, ஒப்பந்தம் மூலம் இலங்கைக்கு முழுமையாக வழங்கிவிட்டது.

இந்தநிலையில், இன்று இந்திய அரசியல்வாதிகள் கச்சதீவை உரிமை கோருவதை நினைக்கும்போது வேடிக்கையாகவுள்ளது.

ஒப்பந்தத்தின்படி கச்சதீவிலுள்ள அந்தோனியார் ஆலயத் திருவிழாவில் இரு நாட்டு மக்களும் ஒவ்வொரு வருடமும் கலந்துகொள்வார்கள். தமிழக மீனவர்களும் இந்தத் தீவில் தங்கித் திரும்புவார்கள்.

அதற்காக இலங்கையின் சொத்தான கச்சதீவை இந்தியாவுக்கு நாம் தாரைவார்க்கமாட்டோம். தமிழக மீனவர்களையும் எல்லை தாண்டி மீன்பிடிக்க அனுமதி வழங்கமாட்டோம் - என்றார்.

## ஜெனிவா தீர்மானம் நிறைவேற்றம் .............

Item 2: L.1/Rev.1 "Promoting reconciliation, accountability and human rights in Sri Lanka"

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Y | ARGENTINA | N | ERITREA | Y | NETHERLANDS |
| Y | ARMENIA | Y | FIJI | N | PAKISTAN |
| Y | AUSTRIA | Y | FRANCE | N | PHILIPPINES |
| Y | BAHAMAS | A | GABON | Y | POLAND |
| A | BAHRAIN | Y | GERMANY | Y | REPUBLIC OF KOREA |
| N | BANGLADESH | A | INDIA | N | RUSSIAN FEDERATION |
| N | BOLIVIA (PLURINATIONAL STATE OF) | A | INDONESIA | A | SENEGAL |
| Y | BRAZIL | Y | ITALY | N | SOMALIA |
| Y | BULGARIA | A | JAPAN | A | SUDAN |
| A | BURKINA FASO | A | LIBYA | A | TOGO |
| A | CAMEROON | Y | MALAWI | Y | UKRAINE |
| N | CHINA | Y | MARSHALL ISLANDS | Y | UNITED KINGDOM OF GREAT BRITAIN AND NORTHERN IRELAND |
| Y | CÔTE D'IVOIRE | A | MAURITANIA | Y | URUGUAY |
| N | CUBA | Y | MEXICO | N | UZBEKISTAN |
| Y | CZECH REPUBLIC | A | NAMIBIA | N | VENEZUELA (BOLIVARIAN REPUBLIC OF) |
| Y | DENMARK | A | NEPAL | | |

IN FAVOUR 22 | AGAINST 11 | ABSTAIN 14

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தத் தீர்மானம் இலங்கைக்கு எதிரானது அல்ல என்றும், இலங்கையில் அனைவருக்கும் நீதியை நிலைநாட்டுவதற்கான தீர்மானம் என்றும் பிரிட்டனின் பிரதிநிதி ஐ.நாவில் இன்று தெரிவித்துள்ளார்.

இலங்கை மீதான தீர்மானம் அனைத்துநாடுகளின் இறையாண்மைக்கும் சவாலாக அமைந்துள்ளது எனத் தீர்மானம் மீதான விவாதத்தில் இலங்கையின் பிரதிநிதி தெரிவித்துள்ளார். குறித்த தீர்மானம் ஐ.நாவின் அடிப்படை உடன்படிக்கைகளுக்கு முரணானது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உரிமை நிலைமைகளை ஐ.நா. அரசியல் மயப்படுத்தியுள்ளது என்று தெரிவித்துள்ள சீனா, இலங்கை மீதான தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இதேநேரம், இலங்கை மீதான ஐ.நா. தீர்மானம் அரசியல் நோக்கம் கொண்டது எனத் தெரிவித்து, பிலிப்பைன்ஸும் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்துள்ளது.

எனினும், 22 நாடுகளின் ஆதரவுடன் இலங்கைக்கு எதிரான தீர்மானம் வெற்றியடைந்துள்ளது.

ஆர்ஜென்ரீனா, ஆர்மேனியா, ஒஸ்ரியா, பஹாமஸ், பிரேசில், பல்கேரியா, ஐவரி கோஸ்ற், செக் குடியரசு, டென்மார்க், பிஜி, பிரான்ஸ், ஜேர்மன், இத்தாலி, மாலாவி, மார்சல் ஐலன்ட், மெக்ஸிகோ, போலன்ட், தென் கொரியா, உக்ரெய்ன், பிரிட்டன், உருகுவே, நெதர்லாண்ட் ஆகிய 22 நாடுகள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளன.

சீனா , ரஷ்யா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், சோமாலியா, பங்களாதேஷ், கியூபா, பொலிவியா, எரித்திரியா, உஸ்பெகிஸ்தான், வெனிசுலா ஆகிய 11 நாடுகள் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்துள்ளன.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கொழும்பில் துக்ளக் ஆட்சி

நாட்டில் பௌத்த, சிங்களப் பேரினவாதம் விஸ்வரூபம் எடுத்து தலைவிரித்தாடுகின்றது.

இது, இன்று, நேற்று நடக்கும் காரியம் அல்ல. இலங்கை சுதந்திரம் அடைந்ததாகக் கூறப்பட்ட காலம் முதல் – சிங்களப் பெரும்பான்மையினரிடம் அரசியல் அதிகாரம் கைம்மாறிய காலம் தொட்டே – நடைபெறும் கைங்கரியம் இதுதான். அன்று மேலாண்மை பெற்ற சிங்களப் பேரினவாதம், தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை யுத்த முனையில் அடக்கியமையை அடுத்து, தமிழர்களுக்கு எதிரான அரச அடக்குமுறையாகக் குரூர வடிவங்களை எடுத்து நிற்கின்றது.

நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்தாக அறிவிக்கப்பட்ட பின்னர், நாட்டின் நாடாளுமன்றமே பேரினவாதக் கொடூரம் அரங்கேறும் பிரதான தளமாகியது. இனவாதக் கொடுங்கோன்மையின் ஊற்றிடமாக சட்டமாக்கும் சபை மாறியது. அன்று முதல் அங்கு இனவாதமே – பேரினவாத வெறியே – அரசோச்சி வருகின்றது.

சிறுபான்மை இனங்களை அடக்கி, ஒடுக்கி, இந்தத் தீவில் அவற்றின் தனித்துவத்தை சிதைத்தழித்து, சின்னாபின்னமாக்கும் சட்டங்களை உருவாக்கும் கொடூர சபையாக நாடாளுமன்றம் மாறியது. சிறுபான்மை இனங்களை அடக்கி, ஒடுக்கும் சட்டங்கள் அங்குதான் தொடர்ந்து யாக்கப்பட்டன.

கொடிய இனவாதத் தாக்குதலில் முதலில் நமது மலையக சகோதரர்களே களப்பலியாகி வீழ்ந்தார்கள். பத்து லட்சம் தமிழ் மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. அவர்கள் நாடற்றவர்களானார்கள். இலங்கையின் அரசியல் சரித்திரத்தில் மிக மிகக் கொடூரமான அந்தச் சட்டத்தை சிங்களப் பேரினவாதம் வெட்கம், ரோஷம், நீதி, நியாயம் ஏதுமின்றி நிறைவேற்றித் தனது சிங்களத்தின் கோர முகத்தை வெளிப்படுத்தியது.

அடுத்து வடக்கு, கிழக்குத் தமிழர்களின் மொழி, கல்வி, வேலைவாய்ப்பு உரிமைகளைப் பறிக்கும் மிலேச்சத்தனமான சட்டங்கள் வரிசையாக அங்கு நிறைவேற்றப்பட்டன.

தனிச் சிங்களச் சட்டம், உயர் கல்வியின் விகிதாசார வாய்ப்புரிமை, பயங்கரவாதத் தடைச் சட்டம் என்று தமிழின அழிப்புக்காகப் பேரினவாதம் நாடாளுமன்றத்தின் மூலம் கட்டவிழ்த்த குரூரச் சட்டங்கள் பலப் பல.

அந்த வகையில் இன்னொரு சட்டத்துக்கு இப்போது முன்னறிவிப்புக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

இதுவரை காலமும் சட்ட ஏற்பாடுகளின்றி, சட்டம் போல தாங்கள் நடைமுறைப்படுத்தி வந்த அநியாய நடவடிக்கையை இப்போது சட்டத்தின் மூலம் நியாயப்படுத்த முனைகிறது கொழும்பு.

கோட்டாபய ஆட்சிப் பீடத்தின் இந்த நடவடிக்கை முயற்சியைப் பார்க்கும் போது சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்த ‘முகம்மது பின் துக்ளக்’ என்ற சோவின் திரைப்படம் நினைவுக்கு வருகின்றது.

எழுநூறு ஆண்டுகளுக்குப் பின்னர் புதைகுழிக்குள் இருந்து உயிருடன் மீண்டவர் போல நடிக்கும் துக்ளக், வந்த கையோடு பொதுத் தேர்தலில் ஒரு தொகுதியில் போட்டியிட்டு எம்.பியாகி விடுவார். பின்னர் பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த முந்நூற்றியைம்பது எம்.பிக்களை விலைக்கு வாங்கி, அவர்கள் அனைவருக்கும் துணைப் பிரதமர் பதவி வழங்கி, அவர்களின் ஆதரவோடு தான் பிரதமரானவர்.

பிரதமர் பதவி ஏற்ற துக்ளக்கை செய்தியாளர்கள் பிய்த்துப் பிடுங்குவார்கள். நாட்டின் உடனடிப் பிரச்சினைகள் குறித்து கேள்வி கேட்பார்கள்.

*“பிரதமர் பதவி ஏற்றதும் ஏன் அமெரிக்கா போகின்றீர்கள்?”* – என்று ஒரு கேள்வி.

*“ஏன், நான் அமெரிக்கா பார்க்கக் கூடாதா?”* – என்று திருப்பிக் கேட்பார் துக்ளக்.

அடுத்த கேள்வி *“லஞ்ச ஊழலை ஒழிக்க என்ன நடவடிக்கை எடுப்பீர்கள்?”* – என்பது.

*“லஞ்சத்தால் என்ன பிரச்சினை?”* – என்று பதில் கேள்வி கொடுப்பார் துக்ளக்.

*“லஞ்சம் சட்ட விரோத செயலல்லவா?”* – என்பார்கள் ஊடகவியலாளர்கள்.

*“அப்படியா? அப்படி என்றால் லஞ்சத்தை சட்ட ரீதியாக்கி விடுவோம்”* என்று கூறும் பிரதமர் துக்ளக், நாட்டில் பியோனில் தொடங்கி, அமைச்சர்கள் வரை ஒவ்வொருவரும் தினசரி தவறாது இவ்வளவு தொகை லஞ்சம் கட்டாயம் பெற வேண்டும் என சட்டமாக்குவோம் என்று அறிவிப்பார்.

அது போல இருக்கின்றது அரசின் புதிய உத்தேச திட்டம் பற்றிய கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸின் அறிவிப்பு. அவர் சட்டத்துறைப் பேராசிரியர் என்ற கருத்துடன் இந்த அறிவிப்பை நாம் நோக்க வேண்டும்.

நாட்டில் படைத் தரப்பு இழைக்கும் குற்றங்களை மூடி மறைத்து, காப்பாற்றும் வகையில் சட்ட விலக்களிப்பு தந்திரோபாயமாக முன்னெடுக்கப்படுகின்றது என்றே இலங்கை ஆட்சிப் பீடம் மீது கடந்த இருபது ஆண்டுகளாகக் குற்றம் சுமத்தப்பட்டு வருகின்றது. அது உண்மையும் கூட.

புதிய அரசமைப்பின் கீழ் கொண்டு வரப்படும் புதிய சட்டத்தின்படி நாட்டின் படையினர் மீது வழக்குத் தாக்கல் செய்யவோ, அல்லது தண்டிக்கவோ முடியாது என்றும் அவர் கூறியிருக்கின்றார். அதாவது படையினர் மீது சட்டம் பாயவே பாயாது என்பது சட்ட ரீதியாக்கப்படும்.

இலங்கையில் கட்டவிழ்வது துக்ளக் ஆட்சிதான் என்பது சட்டம் அதிகம் படித்த அதிமேதாவி அமைச்சர் ஒருவரின் வாய்க் கூற்றிலிருந்து நிரூபணமாகின்றது.

# ஒப்புதல் வழங்கிய பின் சுயவிருப்பில் இலங்கையால் செயற்பட முடியாது!

## லக்ஷ்மன் கிரியெல்ல கூறுகின்றார்



ஜெனிவாவில் இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்தில் 25 வீதமான விடயங்கள் மாத்திரமே யுத்தம் தொடர்பானவையாகும்.

ஏனைய 75 வீதமும் இலங்கையின் ஜனநாயகம், நீதிமன்ற சுயாதீனத்தன்மை, சிறுபான்மை இனத்தவர்கள் நடத்தப்படும் விதம், மாகாணசபைத் தேர்தல் உள்ளிட்டவை தொடர்பானவையாகும்.

எனவே முரண்பாடுகளின் ஊடாக அன்றி, சுமுகமான பேச்சுகள் ஊடாக இந்த நெருக்கடிக்குத் தீர்வைக் காண வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தில் கையெழுத்திட்டிருந்தால் அதற்கேற்பவே செயற்பட வேண்டுமே தவிர தன் விருப்பத்திற்கேற்ப அரசாங்கத்தால் செயற்பட முடியாது எனவும் குறிப்பிட்டார் .

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

அரசாங்கம் மாத்திரமல்ல. நாமும் எமது நாட்டை நேசிக்கின்றோம். எனவே உண்மையில் நாட்டை நேசிப்பதாயின் சர்வதேச சமூகத்துடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

ஆனால் தற்போது அரசாங்கத்துக்கு முகவரியும் இல்லாமல் போயுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தில் கையெழுத்திட்டிருந்தால் அதற்கேற்பவே செயற்பட வேண்டும்.

மாறாக அரசாங்கத்துக்கு அதன் விருப்பத்திற்கேற்ப செயற்பட முடியாது. ஊடக சுதந்திரம், ஜனநாயகம் என்பவற்றைப் பாதுகாக்க வேண்டும். இறையாண்மை எனக் கூறி இவற்றின் பாதுகாப்பை கேள்விக்குறியாக்க முடியாது.

மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினை முழு உலகிற்கும் உரித்துடையதாகும். ஏதேனுமொரு நாட்டில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன என்றால், அது தொடர்பில் ஏனைய நாடுகள் ஐ.நாவில் கருத்துத் தெரிவிக்க முடியும்.

அதற்கமைய இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கருத்து தெரிவிப்பதற்கு ஏனைய நாடுகளுக்கு உரிமை இருக்கிறது.

எனினும் தற்போது கட்டுப்பாடின்றி பள்ளத்தில் செல்லும் வாகனத்தைப் போல அரசாங்கம் பயணித்துக் கொண்டிருப்பது கவலைக்குரியது.

தற்போதைய அரசாங்கம் நிலையற்ற கொள்கையுடையதாகும். அதனால்தான் எதிர்க்கட்சியாக இருக்கும் போது ஒரு விடயத்தையும் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் பிறிதொரு விடயத்தையும் கூறிக் கொண்டிருக்கிறது.

ஐ.நாவில் இலங்கை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில் யுத்தம் தொடர்பில் 25 வீதமான விடயங்களே உள்ளடக்கப்பட்டுள்ளன.

எஞ்சிய 75 வீதம் இலங்கையின் ஜனநாயகம், நீதிமன்ற சுயாதீனத்தன்மை, சிறுபான்மை இனத்தவர்கள் நடத்தப்படும் விதம், மாகாண சபைத் தேர்தல் உள்ளிட்டவை தொடர்பிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

2015 இல் நல்லாட்சி அரசாங்கம் ஆட்சி பொறுப்பேற்றதன் பின்னர் இலங்கையை ஐ.நாவின் மின்சார கதிரையிலிருந்து காப்பாற்றியது.

இவ்வாறான விடயங்கள் சுமுகமான பேச்சு மூலம் கையாளப்பட வேண்டியவையே தவிர, முரண்பாடுகள் மூலம் கையாளப்பட வேண்டியவையல்ல.

தொடர்பாடல்களை பேண வேண்டியது அத்தியாவசியமானதாகும். எதிர்க்கட்சியுடன் கூட தொடர்பாடல்களை முன்னெடுக்காத அரசாங்கம் எவ்வாறு சர்வதேசத்துடன் அதனைப் பேணும்? – என்றார்.

# சர்வதேச அழுத்தங்களிலிருந்து படையினரை பாதுகாக்கத் தேவையான புதிய சட்டம் வரும்!

## என்கிறார் ஜி.எல்.பீரிஸ்



சர்வதேச அழுத்தங்களிலிருந்து படையினரை பாதுகாக்க அரசாங்கம் தேவையான புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தும் என அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், குறித்த புதிய விதிமுறைகள் புதிதாக உருவாக்கப்படும் அரசமைப்பிலும் சேர்க்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தங்கள் இராணுவத்தை பாதுகாக்க மற்ற நாடுகள் சட்டங்களை வகுத்துள்ளன என்றும் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

அதன்படி கொண்டுவரப்படும் புதிய சட்டதிட்டங்களின் படி இராணுவத்தினர் மீது வழக்குத் தாக்கல் செய்யவோ அல்லது அவர்களை தண்டிக்கவோ முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது அமர்வில் இலங்கை தொடர்பான முடிவைப் பொருட்படுத்தாமல் தொடர்புடைய சட்டங்கள் அரசமைப்பில் சேர்க்கப்படும் என்றும் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

# ஜெனிவா பிரேரணையை தோற்கடிக்க அரசின் தமிழ் கைக்கூலிகள் முயற்சி!

## வவுனியாவில் சுமந்திரன் காட்டத்துடன் பேச்சு

இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள ஐ.நா. பிரேரணையை தோற்கடிக்க அரசாங்கத்தின் கைக்கூலிகள் செயற்பட்டு வருகின்றன என நாடளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குற்றம் சாட்டினார்.

வவுனியாவிற்கு நேற்று திங்கட்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன் மற்றும் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் கள விஜயத்தை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த சுமந்திரன் –

இந்த பிரேரணையை தோற்கடிக்க வேண்டும் என இயன்றவரை இலங்கை அரசாங்கம் போராடி வருகின்ற நிலையில் அவர்களுடன் இணைந்து ஒரு சில தமிழ் தரப்புக்களும் செயற்பட்டு வருகின்றன எனவும் குறிப்பிட்டார்.

இந்த பிரேரணையில் வலுகிடையாது பிரயோசனமற்றது என கூறி வாக்களிக்கும் நாடுகளின் மத்தியில் ஒரு குழப்பமான சூழ்நிலையை அவர்கள் ஏற்படுத்தி வருகின்றனர் எனவும் எம்.ஏ.சுமந்திரன் குற்றம் சாட்டினார்.

சர்வதேச தளம் ஒன்றில் இலங்கையை தொடர்ந்தும் மேற்பார்வை செய்வதாக இருந்தால் இந்தப் பிரேரணை நிச்சயம் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதன்படி இன்று பிரேரணை நிறைவேற்றப்படும் என்ற நல்ல செய்தியை மக்கள் அறிவார்கள் என்றும் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

# அ.தி.மு.க. அரசே சிறுபான்மையின மக்களுக்கு அரண்!

## தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி பிரசாரம்



'சிறுபான்மையினருக்கு அ.தி.மு.க. அரசுதான் அரணாக விளங்குகிறது' என தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி தெரிவித்துள்ளார்.

தருமபுரி மாவட்டம், பாலக்கோட்டில் அ.தி.மு.க. வேட்பாளர் கே.பி.அன்பழகனுக்கு ஆதரவாக நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி கலந்துகொண்டு உரையாற்றியிருந்தார்.

அப்போது அவர், 'மத்திய, மாநில அரசுகளில் பல ஆண்டுகாலம் பதவியில் இருந்த தி.மு.கவினரால் மக்களுக்கு எந்தப் பயனும் இல்லை. அ.தி.மு.க. அரசு சிறுபான்மையின மக்களுக்கு எதிரானது என்பது போல சித்திரித்து தி.மு.கவினர் பொய்ப் பிரசாரம் செய்து வருகின்றனர். ஆனால், கடந்த நான்கரை ஆண்டில் இஸ்லாமியருக்கு ஏராளமான நலத்திட்ட உதவிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

'தமிழகத்தில் இருந்து ஹஜ் பயணம் மேற்கொள்ள வழங்கப்படும் நிதியுதவியை 6 கோடியிலிருந்து 10 கோடி ரூபாவாக உயர்த்தி வழங்கியுள்ளோம். மேலும், ஹஜ் புனிதப் பயணம் செல்பவர்களுக்கு சென்னையிலே தங்க வசதி வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று 15 கோடி ரூபாவில், சென்னையில் ஹஜ் இல்லம் கட்டப்பட்டு வருகிறது. தமிழகத்தில் பள்ளிவாசல்களில் சீரமைப்புப் பணி மேற்கொள்ள 5 கோடி ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

'ஆனால், தமிழகத்தில் சிறுபான்மை மக்களிடையே அ.தி.மு.கவுக்கு உள்ள நற்பெயரைச் சீர்குலைக்க தி.மு.க. முயற்சித்து வருகிறது. அ.தி.மு.க. என்றைக்கும் சிறுபான்மையின மக்களுக்கு பாதுகாப்பாகவும், அரணாகவும் விளங்கும்.

'தமிழக தேர்தல் பிரசார பொதுக்கூட்டங்களில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் பொய்களையே தொடர்ந்து பேசி வருகிறார். எதிர்க்கட்சியினரை தரக்குறைவாகப் பேசுகிறார். மாற்றுக் கட்சியினருக்கு ஸ்டாலின் மதிப்பளிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். பத்தாண்டுக் காலம் பதவியில் இல்லாததால் ஸ்டாலின் விரக்தியின் விளிம்பில் இருக்கிறார். அவருடைய முதல்வர் கனவு நனவாகாது. தி.மு.க. வாரிசு அரசியல் செய்யும் குடும்பக் கட்சியாகும். ஆனால், அ.தி.மு.க. ஜனநாயகக் கட்சி. இங்கு உழைப்பவர்கள் எவரும் ஏற்றம் அடையலாம்.

'ஏராளமான அபிவிருத்தித் திட்டங்கள் இத்தொகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே, இந்தத் தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளராக ஐந்தாவது முறையாக போட்டியிடும் அமைச்சர் கே.பி.அன்பழகனுக்கு வாக்களித்து வெற்றிபெற செய்ய வேண்டுகிறோம்' என்று அவர் கோரிக்கை முன்வைத்தார்.

# பெண்களை ஆண்கள் முட்டாளாக்கி விடுகின்றனர்

## கேரளாவில் ராகுல் காந்தி கருத்துரை




'ஆண்களைவிட பெண்கள் பலம் வாய்ந்தவர்கள். ஆனால், பெண்களை ஆண்கள் முட்டாள்களாக்கி விடுவதால் தங்களின் உண்மையான பலம் பெண்களுக்கு புரியாமலே போய்விடுகிறது' என்று காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி கூறியுள்ளார்.

வரும் ஏப்ரல் 6ஆம் திகதி சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள கேரள மாநிலத்துக்கு இரண்டு நாள் பயணமாகச் சென்ற ராகுல் காந்தி, கொச்சியில் உள்ள புனித தெரசா மகளிர் கல்லூரியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று, மாணவிகளுடன் கலந்துரையாடினார்.

அப்போது, 'இந்தச் சமூகம் உங்களை ஒதுக்கித் தள்ளும்போது உள் வலிமையை ஒருங்கிணைத்து அதை எதிர்கொள்ள வேண்டும்' என்று கூறிய ராகுல் காந்தி, மாணவிகளுக்கு தற்காப்பு கலையின் சில நுணுக்கங்களையும் கற்றுக்கொடுத்தார்.

'ஆண்கள் உங்களிடம் ஒருபோதும் சொல்லாத ரகசியம் ஒன்றை கூறுகிறேன். பெண்கள் ஆண்களைவிட பலம் வாய்ந்தவர்கள். ஆண்கள் உங்களை முட்டாள்களாக்குகின்றனர். அதன் காரணமாக, உங்களுடைய பலம் உங்களுக்கு புரியாமல் போய்விடுகிறது. அதிகாரப்படுத்துதலே இவை அனைத்துக்கும் முக்கியப் புள்ளி. இந்தியாவில் பெண்கள் எப்போதும் மோசமாகவே நடத்தப்படுகின்றனர். ஒவ்வொரு நாளும் பெண்கள் அவமதிக்கப்படுகின்றனர்.

'நீங்கள் நினைப்பதை செய்ய இந்த சமூகம் ஒருபோதும் அனுமதிக்காது. இந்தச் சூழ்நிலைகளில், உங்களுடைய உள் வலிமையை ஒருங்கிணைக்க வேண்டும். அதற்கு, எந்த வகையில் இந்த சமூகம் உங்களை புறம்தள்ளுகிறது என்பதையும், எந்த சக்தி உங்களை தள்ளுகிறது என்பதையும் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் முறையாக உங்களை தயார்படுத்திக் கொள்ள முடியும். இந்தச் சமூகம் உங்களை வலிமை குறைந்தவர்களாகவே காட்ட முயற்சிக்கும். அதை ஏற்றுக்கொள்ளக் கூடாது. அதே நேரம், உங்களுடைய சக்தியை தவறாகவும் பயன்படுத்திவிடக் கூடாது. ஏனெனில், நாம் அதிக சக்தி படைத்தவர் என்ற உணர்வு எழும்போது, அதை தவறாக பயன்படுத்தும் எண்ணமும் வந்துவிடும்' என்று ராகுல் காந்திதனது உரையாடலில் குறிப்பிட்டுள்ளார்.

# கொவிஷீல்ட் தடுப்பூசி செலுத்தும் கால இடைவெளியில் மாற்றம்

## மத்திய சுகாதார செயலாளர் கடிதம்



கொரோனாத் தொற்றுக்கு எதிரான கொவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டு 'டோஸ்'களுக்கான கால இடைவெளியை நீடிக்க மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

தடுப்பூசி குறித்த தேசிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவும் கொரோனா தடுப்பூசி செலுத்துவதற்கான தேசிய நிபுணர் குழுவும் அளித்த அறிவுரைப்படி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி கொவிஷீல்ட் தடுப்பூசியை முதல்முறை போடுவதற்கும் இரண்டாவது முறை போடுவதற்கும் தற்போது நடைமுறையில் உள்ள 4 - 6 வார இடைவெளியை 4 - 8 வாரமாக மாற்ற பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்த மாற்றம் கொவிஷீல்ட் தடுப்பூசிக்கு மட்டுமே பொருந்தும் எனவும் கொவேக்ஸின் தடுப்பூசிக்கு அல்ல என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மத்திய சுகாதார செயலாளர் ராஜேஷ் பூஷண் இது தொடர்பாக மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமைச் செயலாளர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில், தொழில்நுட்ப ஆலோசனைக் குழு, கொரோனா தடுப்பூசி போடுவதற்கான தேசிய நிபுணர் குழு ஆகியவற்றின் பரிந்துரையை சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் ஏற்றுக் கொண்டிருப்பதாக கூறியுள்ளார்.

இதனால், கொவிஷீல்ட் தடுப்பூசியை இரண்டாவது முறையாக 4-8 வாரங்களுக்குள் செலுத்துமாறு மாநிலங்களுக்கும் யூனியன் பிரதேசங்களுக்கும் அவர் அறிவுரை வழங்கியுள்ளார்.

கொவிஷீல்ட் தடுப்பூசியை இப்போது குறிப்பிட்டுள்ள இடைவெளியில் இரண்டாவது முறை செலுத்தினால் அதன் பாதுகாப்பு அதிகரிப்பதாகவும், அதேவேளையில் 8 வாரங்களுக்குப் பிறகு தடுப்பூசி வழங்கப்படக்கூடாது என்றும் தற்போதைய அறிவியல் ஆதாரங்களில் தெரியவந்துள்ளது. இந்த அறிவிப்பை கொவிஷீல்ட் தடுப்பூசியை எடுத்துக்கொண்ட பயனாளிகள், தடுப்பூசிகளை செலுத்துவோர் அனைவருக்கும் தெரிவிப்பதற்கான விரிவான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொள்ளவும் மத்திய சுகாதாரச் செயலாளா வலியுறுத்தியுள்ளார்.

# கருத்துக் கணிப்பு முடிவுகளில் அதீத நம்பிக்கை வேண்டாம்!

## கட்சித் தொண்டர்களிடம் கேரள முதல்வர் வேண்டுகோள்



கேரளத்தில் ஆளும் இடதுசாரி முன்னணி மீண்டும் ஆட்சி அமைக்கும் என ஊடகங்கள் கருத்துக் கணிப்பு வெளியிட்டுள்ள நிலையில், அதனால் அதீத நம்பிக்கை கொண்டு பிரசாரத்தில் சுணக்கம் காட்டக் கூடாது என கட்சித் தொண்டர்களுக்கு முதல்வர் பினராயி விஜயன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சட்டப்பேரவைத் தேர்தல் பிரசாரத்துக்காக கோட்டயத்துக்கு நேற்று வந்த முதல்வர் பினராயி விஜயன் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

'மாநிலத்தின் வடக்கு மாவட்டங்களில் இடதுசாரி முன்னணியின் தேர்தல் பிரசார கூட்டங்களில் ஏராளமான மக்கள் பங்கேற்பது ஆளும் முன்னணிக்கு ஆதரவு அதிகரித்து வருவதற்கு சான்றாக அமைந்துள்ளது. அரசுக்கு எதிரான நிலைப்பாடு கொண்டிருந்தவர்களும் அரசின் செயல்பாடுகளை இப்போது ஏற்றுக் கொண்டுள்ளனர்.

'தேர்தலில் இடதுசாரி முன்னணி வெற்றிபெற்று மீண்டும் ஆட்சி அமைக்கும் என ஊடகங்களின் பல்வேறு கருத்துக் கணிப்பு முடிவுகளும் தெரிவிக்கின்றன. தேர்தல் ஓர் அரசியல் விளையாட்டு. ஆதலால் கருத்துக் கணிப்பு முடிவுகளின் மீது அதீத நம்பிக்கை கொண்டு பிரசாரத்தில் தொண்டர்கள் சுணக்கம் காட்டக் கூடாது.

'ஒக்கி, நிவர் புயல்கள், கொரோனா நோய்த்தொற்று என பல பிரச்சினைகள், சவால்கள் இருந்தபோதும் எனது அரசு மாநில மக்களுக்கான நலத் திட்டங்களைச் செயல்படுத்தியது. அரசை எதிர்கொள்ள முடியாமல் எதிர்க்கட்சிகள் பொய்களையும் கட்டுக்கதைகளையும் பரப்பி வருகின்றனர். தலசேரி, குருவாயூர், தேவிகுளம் ஆகிய தொகுதிகளில் பா.ஜ.க கூட்டணி வேட்பாளர்களின் வேட்பு மனுக்கள் தேர்தல் அதிகாரியின் பரிசீலனைக்குப் பின்னரே நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. அது வெளிப்படையான நடவடிக்கை' என்று முதல்வர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் நூறில் இருவருக்கு கொரோனா தொற்று

## சுகாதாரத்துறை முதன்மைச் செயலாளர் எச்சரிக்கை

தமிழகத்தில் மேற்கொள்ளப்படும் கொரோனா பரிசோதனைகளின்போது நூறில் இருவருக்கு நோய்த் தொற்று உறுதி செய்யப்படுவதாக சுகாதாரத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சென்னை, பிராட்வே பகுதியில், கொரோனாப் பரிசோதனை மையங்களை அவர் நேற்று ஆய்வு செய்தார். அப்போது நோய்த் தடுப்பு விதிகளைப் பின்பற்ற வேண்டியது அவசியம் என பொது மக்களுக்கு அவர் வலியுறுத்தினார். பின்னர் ஊடகவியலாளர்களையும் அவர் சந்தித்தார்.

'கடந்த சில நாள்களாக தமிழகத்தில் கொரோனா பாதிப்பு அதிகரித்து வருகிறது. குறிப்பாக, சென்னை, கோவை, செங்கல்பட்டு, திருவள்ளூர், திருப்பூர், ஈரோடு, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் தொற்று அதிகரித்துள்ளது. தினந்தோறும் எழுபதாயிரம் பேருக்கு கொரோனா பரிசோதனை செய்யப்படுகிறது. முன்னதாக 1.5 சதவீதமாக இருந்த பாதிப்பு வீதம், தற்போது 2 சதவீதமாக அதிகரித்துள்ளது. அதாவது, 100 பேருக்கு பரிசோதனை செய்தால் அவர்களில் இருவருக்கு நோய்த் தொற்று இருப்பது உறுதி செய்யப்படுகிறது. இதைக் கருத்தில் கொண்டு பொது மக்கள் கூடுதல் கவனத்துடன் செயல்பட வேண்டும்.

'போர்க்கால அடிப்படையில் சுகாதாரத் துறை சார்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சென்னையில், பெருங்குடி, தரமணி, கந்தன்சாவடி பகுதிகளில் உள்ள ஒரே நிறுவனத்தைச் சேர்ந்த 40 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளது. அங்கு நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளோம்.

'இதைத் தவிர, தேர்தல் பிரசாரங்களில் முகக் கவசம் அணியாதவர்களை கண்காணித்து நடவடிக்கை எடுக்க மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு பரிந்துரை செய்துள்ளோம். சென்னையில், ஒரே பகுதிகளில் அதிகமாக தொற்று ஏற்படும் இடங்களை கண்டறிந்து வருகிறோம். அதன்படி, பெரம்பூர், வானகரம், பெருங்குடி, மடிப்பாக்கம், தண்டையார்பேட்டை, கொடுங்கையூரில் அதிகளவான தொற்று கண்டறியப்பட்டுள்ளது. நோய்த் தடுப்பு விதிகளை மீறுவோருக்கு அபராதம் விதிக்கும் நடைமுறையை தீவிரப்படுத்தி உள்ளோம். கடந்த சில நாள்களில் மட்டும், 38,372 பேரிடமிருந்து, 83.05 லட்சம் அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது' என்று சுகாதாரத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

## 81 ஆண்டுகளுக்குப் பிறகு அவுரங்காபாத் சரணாலயத்தில் புலி

அவுரங்காபாத்தில் உள்ள கவுதாலா சரணாலயத்தில் 81 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக புலி ஒன்று தென்பட்டுள்ளது.

மகாராஷ்டிரா மாநிலம், அவுரங்காபாத் மாவட்டத்தில் அமைந்துள்ள கவுதாலா ஆத்ரம்கட் சரணாலயத்தில் இறுதியாக 1940 ஆண்டுதான் புலி ஒன்று தென்பட்டுள்ளது. அதன் பிறகு வனத்துறை வைத்துள்ள எந்த கண்காணிப்பு கமராவிலும் புலிகள் நடமாட்டம் பதிவாகவில்லை.

இந்நிலையில், 81 ஆண்டுகள் கழித்து முதல் முறையாக தற்போது ஆண் புலி ஒன்று வனத்துறையினரின் கமராவில் பதிவாகியுள்ளது. இது குறித்து வன அதிகாரி விஜய் சத்புதே கூறுகையில், “இந்த புலி யவத்மலில் உள்ள திபேஷ்வர் சரணாலயத்தில் இருந்து 330 கிலோ மீட்டர்கள் கடந்து இங்கு வந்திருக்கலாம். இது நன்கு வளர்ந்த ஆண் புலியாகும். சரணாலயத்திற்கு மார்ச் 11 – 12 ஆம் திகதிளவில் இது வந்துள்ளது. இது மார்ச் 15 ஆம் திகதி வனத்துறை கமராவில் பதிவாகி உள்ளது” என்றார்.

இந்தப் புலி தனக்கான இரையைத் தேடி அங்கே வந்திருப்பதாகவும் அதிகாரிகள் கூறி உள்ளனர்.

மகாராஷ்ரடிரா மாநில வனவிலங்கு வாரிய உறுப்பினர் யாதவ் படேல் கூறுகையில், “இப்புலி தெலங்கானா, அஜந்தா மலைத் தொடர்களைக் கடந்து சுமார் 2000 கிலோ மீட்டர்கள் பயணம் செய்து இங்கு வந்திருக்க வாய்ப்புண்டு. புலியின் வழித்தடங்கள் அவற்றின் வாழ்விடமாக அறிவிக்கப்பட வேண்டும். அவற்றின் வழித்தடங்களைப் பாதுகாக்க சிறந்த வனவிலங்கு மேலாண்மை நடைமுறைகள் செயல்படுத்தப்பட வேண்டும்” என்றார்.

## அமெரிக்காவில் சூப்பர் மார்க்கெட்டில் துப்பாக்கிச்சூடு; 10 பேர் பலியாகினர்

கொலராடோ மாகாணத்தில் போல்டர் பகுதியில் உள்ள ஒரு சூப்பர் மார்க்கெட்டில் மர்ம நபர் ஒருவர் துப்பாக்கியுடன் புகுந்தார். அங்கிருந்த மக்களை நோக்கி சரமாரியாக சுட்டார்.

இதனால் மக்கள் அலறியடித்து கொண்டு ஓடினார்கள்; மர்ம நபர் துப்பாக்கியால் சுட்டதில் பலர் காயம் அடைந்து ரத்த வெள்ளத்தில் கீழே விழுந்தனர்.

இதுபற்றி தகவல் அறிந்ததும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். அவர்கள் சூப்பர் மார்க்கெட்டுக்குள் நுழைந்து மர்ம நபரை பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அப்போது துப்பாக்கி சூட்டில் பொலிஸ் அதிகாரி எரிக்டேலி என்பவர் உயிரிழந்தார்.

பின்னர் மர்மநபரை மடக்கிபிடித்து கைது செய்தார்கள். அப்போது அந்த நபர் ரத்த காயத்துடன் காணப்பட்டார். சூப்பர் மார்க்கெட்டில் மர்ம நபர் துப்பாக்கியால் சுட்டதில் 9 பேர் பலியானார்கள். படுகாயம் அடைந்தவர்களை மீட்டு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர்.

இச்சம்பவம் குறித்து பொலிஸ் தலைமை அதிகாரி மாரிஸ் ஹெரால்டு கூறும்போது, “சூப்பர் மார்க்கெட்டில் நடந்த துப்பாக்கி சூட்டில் எங்களது பொலிஸ் அதிகாரி உள்பட 10 பேர் உயிரிழந்தனர். மர்ம நபரை காயத்துடன் பிடித்துள்ளோம்” என்றார்.

மர்ம நபர் துப்பாக்கி சூட்டை ஏன் நடத்தினார்? என்பது குறித்த விவரங்கள் வெளியிடப்படவில்லை.

இச்சம்பவம் நடந்த கொலரோடா மாகாண கவர்னர் ஜாரெட் பொலிஸ் கூறும்போது, “இந்த நிகழ்வை பார்க்கும்போது என் இதயம் உடைந்து போகிறது. இது புத்தியில்லாத சோகம்” என்றார்.

## இரு நாட்டு நீர் வளங்களில் ஒத்துழைப்பு இந்தியா – பங்களாதேஷ் இணக்கம்



நீர் வளங்களில் தங்கள் நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பை விரிவுபடுத்த இந்தியாவும் பங்களாதேஷும் இணங்கியுள்ளன.

கூட்டு நதிகள் ஆணையகத்தின் கட்டமைப்பின் கீழ் இந்தியா மற்றும் பங்களாதேஷ் நாடுகளின் நீர்வளச் செயலாளர் மட்டக் கூட்டம் அண்மையில் நடைபெற்றிருந்தது.

இதன்போது நீர்வளங்களில் ஒத்துழைப்பை விரிவுபடுத்த முடிவு செய்யப்பட்டதோடு முன்மொழியப்பட்ட டீஸ்டா நீர் பகிர்வு ஒப்பந்தம் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

குறித்த கூட்டத்தில், இந்தியத் தரப்பு பொதுவான நதிகளின் நீர் வளத்தைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாக அதன் நேர்மையான அர்ப்பணிப்பு மற்றும் புதுடில்லியின் தொடர்ச்சியான முயற்சிகளை மீண்டும் வலியுறுத்தியது.

குறித்த சந்திப்பு, பிரதமர் மோடியின் டாக்கா விஜயத்திற்கு முன்னதாக நடைபெற்றுள்ளது.

இரு நாடுகளிலும் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தோடு நேரடியாக பங்களிக்கும் 54 பொதுவான நதிகளை இந்தியாவும் பங்களாதேஷும் இதுவரை காலமும் பகிர்ந்து கொள்ளவில்லை. இந்தநிலையில் குறித்த விடயத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான நெருக்கமான ஒத்துழைப்பு முயற்சிகளை இரு தரப்பினரும் அங்கீகரித்துள்ளனர்.

மேலும், நதிகளின் நீரைப் பகிர்வதற்கான கட்டமைப்பு, மாசுபாட்டைக் குறைத்தல், நதிக் கரையோரப் பாதுகாப்பு, வெள்ள மேலாண்மை உள்ளிட்ட அனைத்து நீர்வளப் பிரச்சினைகளிலும் ஒத்துழைப்பை விரிவுபடுத்த இரு தரப்பினரும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

## பா.ஜ.க.வை ஆதரிப்பதால் பாரம்பரியத்துக்கு பங்கம் என்பது நகைப்புக்குரியது

### த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் பேட்டி



‘தொகுதி ஒதுக்கீட்டில் திருப்தியா, அதிருப்தியா என்பதற்கு இடமில்லை என, அ.தி.மு.க. கூட்டணியில் த.மா.கா.வுக்கு 6 இடங்கள் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளமை பற்றி ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியின்போது த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் கூறியுள்ளார்.

‘அறுதிப் பெரும்பான்மையை தனியாகவே பெற்றுவிட வேண்டும் என்பதுதான் அ.தி.மு.க.வின் கருத்தாக உள்ளது. தி.மு.க. கூட்டணியிலும் இதே நிலைதான். மக்கள் நலக் கூட்டணியில் தலா 27 தொகுதிகளில் போட்டியிட்ட ம.தி.மு.க., வி.சி.க., கம்யூனிஸ்ட்டுகள் உள்ளிட்டவற்றுக்கு தலா 6 தொகுதிளைத்தானே தி.மு.க.வும் ஒதுக்கியுள்ளது. இதனை ஒப்பிட்டுத்தான் 6 தொகுதிகளை த.மா.கா.வுக்கு ஒதுக்கியுள்ளனர். எனவே, தொகுதி ஒதுக்கீட்டில் திருப்தியா, அதிருப்தியா என்பதற்கு இடமில்லை’என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

‘இருக்கும் சூழலுக்கு ஏற்பதான் ஒரு அரசியல் கட்சி செயல்பட முடியும். அனைத்துக் கட்சிகளுமே தனித்துப் போட்டியிடுவதற்கான சூழல் இல்லாத போது த.மா.கா. மட்டும் தனித்துப் போட்டியிடுவதன் மூலம் இதைவிட மோசமான பாதிப்பு ஏற்பட்டால் என்ன செய்வது? சட்டப் பேரவையில் த.மா.கா.வின் குரல் ஒலிக்க வேண்டும். அனைத்துக் கட்சிகளுமே கட்சியின் அடித்தளத்தை கட்டமைத்து வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வதன் மூலம்தான் கூட்டணிகளில் அதிக தொகுதிகளைப் பெற முடியும். இல்லையெனில் கூட்டணிக்குத் தலைமை ஏற்கும் கட்சிகள் குறைவான தொகுதிகளைத்தான் ஒதுக்கும் என்பதை அனைவரும் முதலில் உணர வேண்டும். இது தமாகாவுக்கு மட்டுமல்ல, கூட்டணியை எதிர்நோக்கிக் காத்திருக்கும் அனைத்து கட்சிகளுக்குமே பொருந்தும் என்பதே நிதர்சன உண்மை’ என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

‘காங்கிரஸ் பாரம்பரியத்தில் வளர்ந்த நீங்கள் திடீரென பா.ஜ.க.வை ஆதரித்தது நெருடலாக இல்லையா?’ என்ற கேள்விக்குப் பதிலளித்த ஜி.கே. வாசன், ‘2004, 2009 ஆகிய இரண்டு தோதல்களில் காங்கிரஸ் கூட்டணி தொடர் வெற்றியைப் பெற்றது. 2014, 2019 இல் பா.ஜ.க. தொடர் வெற்றியைப் பெற்றுள்ளது. இதற்குக் காரணம் மக்களின் மன நிலை. எனவே பா.ஜ.க.வை ஆதரித்ததற்கு காரணம் மக்களின் மன நிலையை நாங்களும் ஏற்றுக்கொண்டதுதான்.

‘காங்கிரஸ் வீழ்ச்சியே பா.ஜ.க.வின் படிப்படியான வளாச்சிக்குக் காரணமாகும். பிரதமா நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சியில் இந்தியா வளர்கிறது, பாதுகாப்பாக இருக்கிறது என்பதுதான் பெரும்பாலான மக்களின் மனநிலையாக உள்ளது. நேர்மை, எளிமை, தூய்மை, வெளிப்படைத் தன்மை என்பது தான் த.மா.கா.வின் பாரம்பரியம். பா.ஜ.க.வை ஆதரிப்பதால் எங்களது பாரம்பரியத் துக்குப் பங்கம் ஏற்பட்டு விட்டது என்பது நகைப்புக்குரியது’ என்று தெரிவித்துள்ளார்.

## வங்கதேசத்தில் அகதிகள் முகாமில் பெரும் தீ விபத்து நூற்றுக்கணக்கான கூடாரங்கள் தீயில் எரிந்து சேதம்

வங்கதேசத்தில் உள்ள ரோஹிங்கியா அகதிகள் முகாமில் பெரும் தீ விபத்து நேரிட்டது.



அந்நாட்டின் தெற்குப் பகுதியில் உள்ள காக்ஸ் பஜார் மாவட்டத்தில் பலுகாலி என்ற இடத்தில் ரோஹிங்கியா முஸ்லீம்களுக்கு முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

இதில் தீப்பிடித்ததில் நூற்றுக்கணக்கான கூடாரங்கள் எரிந்து சேதம் அடைந்தன.

மலைப்பாங்கான பகுதியில் இந்த முகாம் அமைக்கப்பட்டிருந்ததாலும், அருகில் நீர் நிலைகள் இல்லாததாலும் நெருப்பை அணைப்பதில் தாமதம் ஏற்பட்டது.

தீயணைப்புப் படையினர் பல மணி நேர போராட்டத்திற்குப் பின் நெருப்பை அணைத்தனர். இந்த விபத்தில் 3 பேர் உயிரிழந்தார் என கூறப்படும் நிலையில் அதுபற்றிய தகவல் அறிவிக்கப்படவில்லை.

## காங்கோவில் அதிபர் வேட்பாளர் பலி தேர்தல் நாளன்று உயிரிழந்த பரிதாபம்

மத்திய ஆப்பிரிக்க நாடான காங்கோவில் நேற்று முன்தினம் அதிபர் தேர்தல் நடைபெற்றது. இதில் 1979 ஆம் ஆண்டு முதல் அந்த நாட்டின் அதிபராக இருந்து வரும் சசவ் நுகுசோவை எதிர்த்து போட்டியிட்ட 6 வேட்பாளர்களில் முக்கியமானவராக கருதப்பட்டவர் கை பிரைஸ் பர்பைட் கோலஸ்.



61 வயதான இவருக்கு கடந்த வெள்ளிக்கிழமை திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டதை தொடர்ந்து தனது இறுதிக்கட்ட தேர்தல் பிரசாரத்தை ரத்து செய்துவிட்டு ஆஸ்பத்திரியில் சேர்ந்தார்.

தனக்கு மலேரியா தாக்கி இருக்கலாம் என சந்தேகிப்பதாக அவர் கூறிய நிலையில், மருத்துவ பரிசோதனையில் அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

அதனைத்தொடர்ந்து ஆஸ்பத்திரி படுக்கையில் இருந்தபடி வீடியோ ஒன்றை வெளியிட்ட அவர் தான் சாவுடன் போராடிக்கொண்டிருப்பதாகவும், இருப்பினும் மக்கள் மாற்றத்துக்காக வாக்களிக்க வேண்டும் எனவும் பேசினார்.

இந்த நிலையில் தேர்தல் நாளான நேற்று முன்தினம் அவரது உடல்நிலை மிகவும் மோசமடைந்தது. இதையடுத்து உயர் சிகிச்சைக்காக அவரை பிரான்ஸ் அழைத்து செல்ல முடிவு செய்யப்பட்டது.

அதன்படி காங்கோ தலைநகர் பிரஸ்சாவில்லேவில் இருந்து மருத்துவ விமானத்தில் கை பிரைஸ் பர்பைட் கோலஸ் பிரான்ஸ் புறப்பட்டார். ஆனால் செல்லும் வழியில் விமானத்திலேயே அவரது உயிர் பிரிந்தது.

முக்கியத்துவம் வாய்ந்த அதிபர் வேட்பாளரான கை பிரைஸ் பர்பைட் கோலஸ், தேர்தல் நாளன்று உயிரிழந்த சம்பவம் அவரது ஆதரவாளர்களை மீளாத் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

## இந்திய மாணவர்களுக்கு சீனாவில் அனுமதி இல்லை

சீன பல்கலைக்கழகங்களில் படித்துவிட்டு தாயகம் திரும்பிய இந்திய மாணவர்கள் மீண்டும் வர அனுமதிக்கப்பட மாட்டார்கள் என சீனா தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றின் எதிரொலியாக சர்வதேச விமான போக்குவரத்துக்கு தடை நீடிப்பதால் இந்த முடிவை எடுத்துள்ளதாக சீன அரசு தெரிவித்துள்ளது.

அதற்குப் பதிலாக அங்கு படித்து வந்த இந்திய மாணவர்கள் தங்களது பல்கலைக்கழகங்களிடம் தொடர்பு வைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

சுமார் 23 ஆயிரம் இந்திய மாணவர்கள் சீன பல்கலைக்கழகங்களில் படித்து வந்தனர்.

# கொங்கிறீட் பேனல் நிரந்தர வீடமைப்புத் திட்டம் அமைச்சர் வியாழேந்திரனால் அடிக்கல் நாட்டல்



நாட்டைக்கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாக விரைவான கட்டுமான செலவு - செயற்திறன் கொண்ட கொங்கிறீட் பேனல் நிரந்தர வீடமைப்புத் திட்டத்திற்கான மட்டக்களப்பு மாவட்டத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வுகள் நேற்று திங்கட்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்றன.

மட்டக்களப்பு கோறளைப்பற்று வடக்கு, ஏறாவூர்ப் பற்று, வவுணதீவு -மண்முனை மேற்கு மற்றும் மண்முனை தென் மேற்கு - பட்டிப்பளை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் இராஜாங்க அமைச்சரின் சிபாரிசுக்கு அமைவாக நிர்மானிக்கப்படவுள்ள 1,280,000 பெறுமதியான 5 வீடுகளுக்கான அடிக்கல்நடும்நிகழ்வுகளிற்கும் பிரதம விருந்தினராக பின்தங்கிய கிராமிய அபிவிருத்தி மற்றும் மனைசார் கால்நடை வளர்ப்பு, சிறு பொருளாதாரப் பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் கலந்து கொண்டார்.

வவுணதீவு நாவற்காடு கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிக்கான வீட்டிற்கான அடிக்கல் நடும் நிகழ்வும் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் எஸ். சுதாகர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்விலும் இராஜாங்கஅமைச்சர்எஸ்.வியாழேந்திரன் கலந்துகொண்டு அடிக்கல்லினை நாட்டி வைத்தார்.

இந்நிகழ்வில் ஜப்கா நிறுவனத்தின் பணிப்பாளர் லுஸ்லன் நிக்கட்டின், பிராந்திய முகாமையாளர் பிரவீனா, மாவட்ட செயலக உயரதிகாரிகள், பிரதேச செயலக உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள், முற்போக்கு தமிழர் கட்சியின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்களென பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

## ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களுக்கான போட்டிப் பரீட்சையில் பாரிய மோசடிகள்

அம்பாறை மார்ச் 23

கிழக்கு மாகாண பாடசாலைகளில் வெற்றிடமாக உள்ள ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக பரீட்சார்த்திகள் விசனம் தெரிவித்தனர்.

கிழக்கு மாகாண ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களுக்கு ஆங்கில உயர் தேசிய டிப்ளோமாதாரிகளை சேர்த்துக் கொள்ளும் நோக்கில், கடந்த பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி இப்போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது.

அதில் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய 03 மாவட்டங்களில் இருந்து சுமார் 600இற்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

இதில் இடம்பெற்ற நுண்ணறிவு பரீட்சை வினாத்தாள் பரீட்சைக்கு முன்னர் வெளியாகி இருக்கலாம் என பரீட்சாத்திகள் சந்தேகிக்கின்றனர்.

ஏனெனில், நுண்ணறிவு வினாத்தாளில் காணப்பட்ட 20இற்கும் மேற்பட்ட வினாக்கள் பிரபல போட்டிப் பரீட்சை வளவாளரால் வெளியிடப்பட்ட புத்தகம் ஒன்றிலிருந்து எவ்வித மாற்றமும் இன்றி பிரதியாக்கம் செய்யப்பட்டுள்ளன.



இதனை எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளமுடியாதெனவும் எமக்கான தீர்வு வேண்டும் எனவும் பரீட்சார்த்திகள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரளவை, அவரது கந்தளாயில் உள்ள அலுவலகத்தில் நேற்று முன்தினம் சந்தித்து மகஜர் கொடுக்க முற்பட்டனர்.

எனினும், நாடாளுமன்ற உறுப்பினர், கொழும்புக்குச் சென்றுள்ளதால், அவரது பிரத்தியேக செயலாளர் கே.எம். வாலுகவிடம் மகஜரைக் கையளித்தனர்.

இதேவேளை, இவ்விடயம் தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர், கிழக்கு மாகாண பொதுச் சேவை செயலாளர் ஆகியோருக்கு அறிவித்தும் இதுவரை தீர்வு கிடைக்கவில்லை என பரீட்சார்த்திகள் மேலும் தெரிவித்தனர்.

## கல்முனை மாநகர சபையின் முப்பத்தைந்தாவது அமர்வு

கல்முனை மாநகர சபையின் 35ஆவது சபை அமர்வு முதல்வர் கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் சபா மண்டபத்தில் நேற்று மாலை இடம்பெற்றது.

இந்த அமர்வில் கல்முனை மாநகர சபையினால் வழங்கப்படும் சேவைகளை பரிசீலனை செய்வதற்கு ஒரு குழு அமைக்கப்படவேண்டும் என தேசிய காங்கிரஸ் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சப்ராஸ் மன்சூர் தெரிவித்தார்.

இதற்கமைய கல்முனை மாநகர சபைக்கு சேவைபெறும் நிமிர்த்தம் வருகின்ற பொதுமக்களுக்கு அவர்களது தேவைகளை விரைவாகவும் நேர்த்தியாகவும் வழங்கவேண்டும் என்பதோடு சேவைகள் அனைத்தும் முறையாக வழங்கப்படுகின்றதா என்பதை பரிசீலனை செய்வதற்கு உள்ளக நடைமுறை பரிசீலனை குழு ஒன்றினை இஸ்தாபித்து அக்குழுவினூடாக மாநகரசபையினால் வழங்கப்படும் சேவை சிக்கல்களை உடனே தீர்த்துவைக்குமாறு கேட்டுக்கொண்டதற்கு அமைய இது குறித்து நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று மாநகர பொதுவசதிகள் குழு தவிசாளர் உறுப்பினர் ஹென்றி மகேந்திரன் மற்றும் சபை முதல்வர் ஆகியோர் உறுதி வழங்கியாமை குறிப்பிடத்தக்கது.

## சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தில் ஒரு லட்சம் கிலோ மீற்றர் வீதி திருத்தம்

அக்கரைப்பற்று,மார்ச் 23

அரசாங்கத்தின் சுபீட்சத்தின் நோக்கு கருப்பொருளுக்கமைய ஒரு இலட்சம் கிலோ மீற்றர் வீதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ், அக்கரைப்பற்று 20, 21 பொது வீதி நிர்மாணப் பணிகள் அக்கரைப்பற்று மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகியின் தலைமையில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர்களான அக்கரைபற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவர் எஸ்.எம். சபீஸ், எம்.ஐ.சஹாப்தீன், மாநகர சபையின் பிரதம பொறியியலாளர்



ஜே.ஆகில், வீதி அபிவிருத்தி அதிகார சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், மாநகர சபை உத்தியோகத்தர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள், சமூக நலன் விரும்பிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## வீட்டு வசதியற்ற மக்களுக்கான பொருத்து வீடுகள் அமைக்கும் திட்டம்

கோறளைப்பற்று மார்ச் 23

கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு பொருத்து வீடுகள் அமைக்கும் வேலைத்திட்டம் நேற்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுஇணைத் தலைவரும்,கோறளைப்பற்று பிரதேசசபை ஒருங்கிணைப்பு குழுத் தலைவருமான கௌரவ சிவநேசதுரை சந்திர காந்தன் ஊரியன்கட்டு பிரதேசத்தில் அடிக்கல் நட்டு ஆரம்பித்து வைத்திருந்தார்.

இதன் மூலம் வறுமை கோட்டின் கீழ் வாழும் வீட்டு வசதி அற்ற மக்கள் பலர் தாம்



நிம்மதியாகவும் சந்தோசமாகவும் வாழக் கூடிய வீட்டு வசதியினை பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனடிப்படையில் இந்நிகழ்வுக்கு வாகரை பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## திருகோணமலை மாவட்ட பாடசாலைகளில் இடம்பெற்ற வினாடி வினாப் போட்டி முடிவுகள்

திருகோணமலை,மார்ச் 23

திருகோணமலை மாவட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் உயர்தர மாணவர்களுக்கிடையே கடந்த சனிக்கிழமை Do You Know Quiz Final வினாடி வினா போட்டி தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் இடம்பெற்றது.

இவ்வினாடி வினாப்போட்டி கணித விஞ்ஞானப் பிரிவு, வர்த்தகப்பிரிவு, கலைப்பிரிவு, தொழில்நுட்ப பிரிவு என நான்கு பிரிவுகளில் இடம்பெற்றதுடன் ஒவ்வொரு பிரி விலும் முதல் மூன்று இடங்களினைப் பெற்ற பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அப் பாடசாலைகளின் சார்பில் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கான பரிசில்களும்ச கௌரவிப்புக்களும் வழங்கப்பட்டன.

இவ்போட்டியில் வெற்றி பெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு -

**கணித விஞ்ஞானப் பிரிவு**

1ஆம் இடம் - தி/ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி, 2ஆம் இடம் - தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி, 3ஆம் இடம் - தி/ இ.கி.ச.ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி.

**வர்த்தகப்பிரிவு**

1ஆம் இடம் - தி/ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி, 2ஆம் இடம் - தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி, 3ஆம் இடம் - தி/ இ.கி.ச.ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி.

கலைப்பிரிவு

1ஆம் இடம் - தி/ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி, 2ஆம் இடம் - தி/கலைமகள் மகா வித்தியாலயம், 3ஆம் இடம் - தி /மெதடிஸ்த மகளிர் கல்லூரி.

தொழிநுட்ப பிரிவு

1ஆம் இடம் - தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி, 2ஆம் இடம் - தி/ விபுலானந்தா கல்லூரி, 3ஆம்





இடம் - தி/ நிலாவெளி கைலேஸ்வர கல்லூரி.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அடுத்தடுத்து இரு பட்டங்களை வென்றார் ரஷ்ய டென்னிஸ் வீராங்கனை கசட்கினா




செயின்ட் பீட்டர்ஸ்பர்க் மகளிர் டென்னிஸ் தொடரில் ஒற்றையர் பிரிவில் ரஷ்ய வீராங்கனை டாரியா கசட்கினா சாம்பியன் பட்டம் வென்றார்.

இறுதிப் போட்டியில் சகநாட்டு வீராங்கனையான மார்கரிட்டா கஸ்பர்யானுடன் மோதிய கசட்கினா 6 – 3, 2 – 1 என்ற கணக்கில் முன்னிலை வகித்தபோது மார்கரிட்டா காயம் காரணமாக விலகினார். அதையடுத்து கசட்கினா சம்பியன் பட்டத்தை தனதாக்கினார்.

இந்தச் சுற்றுப்போட்டி, 2016 முதல் பிரீமியர் தொடராக தரமுயர்த்தப்பட்ட பின்னர் சம்பியனாகும் முதல் ரஷ்ய வீராங்கனை இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது. 2003 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த டென்னிஸ் போட்டித் தொடரில் ஆரம்ப வருடத்திலும் 2005 இலும் ரஷ்ய வீராங்கனைகள் சம்பியனாகியிருந்தனர். அதன் பின்னர் அந்தவாய்ப்பு கசட்கினாவுக்குக் கிடைத்துள்ளது.

அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற பிலிப் ஐலன்ட் டென்னிஸ் தொடரிலும் வெற்றிபெற்றிருப்பதால், 2021 பருவகாலத்தில் 2 பட்டங்களை வென்ற முதல் வீராங்கனை என்ற பெருமையும் கசட்கினாவுக்கு கிடைத்துள்ளது. ஒரே பருவகாலத்தில் கசட்கினா இரண்டு சம்பியன் பட்டங்களைப் பெறுவது இதுதான் முதல்முறை என்பதும் குறிப்பிடத்தது.

# தொடரைக் கைப்பற்றியது நியூசிலாந்து




நியூசிலாந்து – பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் கிறிஸ்ட் சேர்ச்சில் நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியிலும் வெற்றிபெற்ற நியூசிலாந்து கிரிக்கெட் அணி, இன்னுமொரு போட்டி மீதமிருக்கும் நிலையிலேயே தொடரையும் கைப்பற்றியிருக்கிறது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 271ஓட்டங்களைப் பெற்றது. தமிம் இக்பால் 78 ஓட்டங்களையும் மொஹமட் மிதுன் ஆட்டமிழக்காமல் 73 ஓட்டங்களையும் பெற்றனர். நியூசிலாந்தின் மிச்செல் சன்ட்னர் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலளித்துத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 48.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. அணித்தலைவர் டொம் லதாம் ஆட்டமிழக்காமல் 11 ஓட்டங்களையும் டெவொன் கொன்வே 72 ஓட்டங்களையும் எடுத்து நியூசிலாந்தின் வெற்றியை உறுதிப்படுத்தினர். பங்களாதேஷ் அணியின் முஸ்டபிஃசர் ரஹ்மான், மெஹதி ஹசன் இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரர் விருதை டொம் லதாம் பெற்றுக்கொண்டார். இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவதும் தொடரின் இறுதியுமான ஒருநாள் சர்வதேசப் போட்டி 26ஆம் திகதி வெலிங்டனில் நடைபெறவுள்ளது.

## பார்சிலோனா அசத்தல் மெஸ்ஸியின் புதிய சாதனை!

ஸ்பெயினில்நடைபெறும்லாலிகா கால்பந்து லீக் தொடரில் பார்சிலோனா – ரியல் சொசிடாட் அணிகள் நேற்று மோதின. இதில் முழுமையாக ஆதிக்கம் செலுத்திய பார்சிலோனா அணி 6 – 1 என்ற கோல் கணக்கில் அபாரமாக விளையாடி வெற்றிபெற்றது. அந்த அணியின் லயனல் மெஸ்ஸி, செர்ஜியோ டெஸ்ட் இருவரும் தலா 2 கோல்களையும் அன்ட்டோ கிரீஸ்மன், டெம்பெல் ஆகியோர் தலா 1 கோலையும் அடித்தனர்.

இந்த போட்டியின் மூலம் பார்சிலோனா கழக அணிக்காக அதிக போட்டிகளில் விளையாடிய வீரர் என்ற பெருமை மெஸ்ஸிக்கு (768) கிடைத்துள்ளது.

அதேவேளை, பார்சிலோனா அணிக்காக 700 கோல்களை அடித்தவர் என்ற சாதனையையும் மெஸ்ஸி புரிந்துள்ளார். இவற்றில் 663 கோல்கள் உத்தியோகபூர்வ போட்டிகளிலும் 37 கோல்கள் சிநேகபூர்வ போட்டிகளிலும் அடிக்கப் பட்டவை.

லா லிகா லீக் தொடரில் 28 லீக் ஆட்டங்களின் முடிவில் அத்லெடிகோ மட்ரிட் (66), பார்சிலோனா (62), ரியல் மட்ரிட் (60), செவில்லா (55) அணிகள் முதல் 4 இடங்களில் உள்ளன.



## மியாமி ஓபின் டெனிஸ் தொடரில் விளையாடமுடியாமை வருத்தமளிக்கிறது

## செரினா வில்லியம்ஸ்

23 தடவைகள் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவரான 39 வயது செரினா வில்லியம்ஸ், அம்முறை மியாமி ஓபின் தொடரில் விளையாட முடியாமல் போனமை வருத்தமளிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

சத்திரசிகிச்சை ஒன்றுக்காக தொடரிலிருந்து விலகிய அவர், மியாமியில்நடைபெறும் போட்டித் தொடர் எனக்கு விசேடமானது. இது எனது இடம். இங்கேயுள்ள அற்புதமான ரசிகர்களை இம்முறை சந்திக்கமுடியாமல் போயுள்ளது கவலையளிக்கிறது என்று தனது வருத்தத்தைப் பதிவுசெய்துள்ளார்.

ஆண்கள் பிரிவுப் போட்டிகளில் விளையாடவிருந்த நொவாக் ஜோவிக், ரோஜர் பெடரர், ரஃபேல் நடால் போன்றோரும் விலகியிருப்பதால் இம்முறை மியாமி தொடர் புதியவர்களுக்கான நல்ல வாய்ப்பாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டி இன்று ஆரம்பம்!




இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 3 ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் கொண்ட தொடரின் முதல் போட்டி இன்று புனேயில் ஆரம்பமாகியுள்ளது.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் மற்றும் இருபதுக்கு இருபது தொடர்களை வென்ற உற்சாகத்தோடு இந்திய அணியும், இந்தத் தொடரையாவது வென்றாகவேண்டும் என்ற நோக்கோடு இங்கிலாந்து அணியும் களமிறங்கியுள்ளன.

இந்திய அணியில் சகலதுறை வீரர் க்ருனல் பாண்ட்யாவும் வேகப்பந்துவீச்சாளர் பிரசிட் கிருஷ்ணாவும் ஒருநாள் போட்டி அறிமுகத்தை மேற்கொண்டுள்ளனர்.

# இலங்கையின் உள்ளக விவகாரத்தை இந்தியா தேர்தல் பிரசாரமாக்கக்கூடாது!

## திஸ்ஸ விதாரண தெரிவிப்பு



இலங்கையின் உள்ளக விவகாரத்தை இந்தியா மாநில தேர்தல் பிரசாரமாக பயன்படுத்திக் கொள்ளகூடாது. ஒட்டுமொத்த சிங்கள மக்களும் தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள் என்ற நிலைப்பாட்டையே ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. இனப்பிரச்சினைக்குத் தீர்வை புதிய அரசமைப்பின் ஊடாக ஏற்படுத்த வேண்டும்.

சர்வகட்சி குழு அறிக்கையை முழுமையாக செயற்படுத்தியிருந்தால். இனப்பிரச்சினைகுத்தீர்வு 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிடைக்கப்பெற்றிருக்கும்.

அப்போதைய அரசாங்கம் அந்த விடயம் தொடர்பாக அக்கறை கொள்ளவில்லை. புதிய அரசமைப்பு தொடர்பிலான நிபுணர் குழுவினரிடம் சர்வ கட்சி குழு அறிக்கையை இவ்வாரம் சமர்ப்பிக்கவுள்ளோம் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

இலங்கை தொடர்பில் ஜெனிவாவில் முன்வைக்கப்பட்டுள்ள, பிரேரணை மீதான வாக்கெடுப்பு தொடர்பாக வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணையில் பல நாடுகள் எதிராகவும், ஆதரவாகவும் வாக்களிக்கவுள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்தியா எத்தீர்மானத்தை எடுக்கும் என்பது ஆசிய வலய நாடுகளின் பிரதான எதிர்பார்ப்பாக காணப்படுகிறது. ஜெனிவா விவகாரத்தில் இலங்கைக்கு இந்தியா ஆதரவு வழங்குவதாக ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தாலும் தற்போது அந்த வாக்குறுதியில் தளம்பல் நிலை காணப்படுகிறது.

இந்தியாவில் மாநில தேர்தல் பிரசாரம் சூடுபிடித்துள்ள நிலையில் இலங்கையின் உள்ளக விவகாரம் பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது.

தமிழர் விவகாரம், ஈழம் ஆகிய விடயங்கள் தென்னிந்தியாவின் தேர்தல் மேடைகளில் பிரதான காரணியாக காணப்படுகிறது. காலம்காலமாக உள்ள பிரச்சினையை இந்தியா தேர்தல் காலத்தில் பயன்படுத்திக் கொள்வது பொருத்தமற்றது.

ஜெனிவாவிவகாரத்தில் இலங்கைக்கு ஆதரவாக இந்தியா செயற்படக்கூடாது என தென்னிந்திய அரசியல் பிரமுகர்கள் குறிப்பிட்டுள்ளமையை அறிய முடிகிறது. பின்னணியில் இலங்கை தொடர்பான பிரேரணையின் மீதான வாக்கெடுப்பில் இந்தியா நடுநிலை வகிக்கவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையின் உள்ளக விவகாரத்தை இந்திய தேர்தல் பிரசாரமாக பயன்படுத்திக் கொள்வது தவறாகும்.

இலங்கையில் ஒட்டுமொத்த சிங்கள மக்களும் தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள் என்ற நிலைப்பாட்டை ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை தோற்றுவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பினரும் யுத்தக் குற்றச்சாட்டுக்களை மேற்கொண்டுள்ளார்கள். இவ்விடயம் குறித்து எத்தரப்பினரும் கருத்துரைப்பதில்லை. ஜெனிவா விவகாரத்தில் நாட்டின் சுயாதீனத்தன்மைக்கு உட்பட்டு தீர்மானங்கள் எடுப்பது அவசியமானதாகும்.

பல்லினசமூகம் வாழும் நாட்டில் ஓர் இனத்தின் உரிமைகள் அரசமைப்பின் ஊடாகமுடக்கப்படும்போது அங்கு பிரிவினைவாதம் தோற்றம் பெறும் என்பதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு சிறந்த எடுத்துக்காட்டு. தற்போது நடைமுறையில் உள்ள அரசமைப்பு மாத்திரமல்ல அதற்கு முற்பட்ட கால அரசமைப்புக்கள் கூட முரண்பட்ட தன்மையிலும் பிற இனத்தின் உரிமைகளை முடக்கும் வகையிலும் காணப்பட்டன.

30 வருட கால சிவில் யுத்தம் தோற்றம் பெறுவதற்கு ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும்.

தவறான நிர்வாகம், எல்லை மீறிய அதிகார பிரயோகங்கள், விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்றம் பெறுவதற்கு பிரதான காரணியாக அமைந்தது.

பிரச்சினைக்கு பேச்சு ஊடாகத் தீர்வு காண எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் தோற்கடிக்கப்பட்டன. இதற்கு சர்வதேச நாடுகளின் சுய நல போக்கும் ஒரு காரணியாக இருந்தது.

இனங்களுக்கு மத்தியில் புரையோடி போயிருந்த இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய தேவை காணப்பட்டது 1997 மற்றும் 1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சர்வகட்சித் தலைவர் குழு கூடம் இடம்பெற்றது.

நாடாளுமன்றத்தை அங்கீகரித்த அனைத்து அரசியல் கட்சிகளும் சர்வ கட்சி கூட்டத்தில் பங்கு பற்றின. தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை.

20 தொடக்கம் 25 வரையான கூட்டங்கள் இடம்பெறும் போது அதிகாரப் பகிர்வு குறித்து பேசப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் விடுதலை முன்னணி சர்வ கட்சித் தலைவர் கூட்டத்தில் இருந்து வெளியேறியது.

சர்வகட்சித்தலைவர் குழுவின் அறிக்கை யுத்தம் முடிவடைந்ததுக்கு பின்னர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் முன்வைக்கப்பட்டது.

மாகாண மட்டத்தில் முழுமையான அதிகார பகிர்வு, உள்ளூராட்சி மன்ற மட்டத்தில் அதிகார பகிர்வு மற்றும் இனங்களுக்கிடையிலான சம அதிகார வழங்கல் என்ற பிரதான மூன்று விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன. இவற்றை அக்காலக் கட்டத்தில் செயற்படுத்த உரிய கவனம் செலுத்தப்படவில்லை.

இனப்பிரச்சினைக்கு புதிய அரசமைப்பின் ஊடாக தீர்வு காணப்படவேண்டியது அவசியமாகும். புதிய அரசமைப்பு தொடர்பிலான லங்காசமசமாஜ கட்சியின் யோசனையாக சர்வ கட்சி தலைவர் குழு அறிக்கையை இவ்வாரம் முன்வைக்கவுள்ளோம். கம்யூனிஸ கட்சியும் இதற்கு ஆதரவு வழங்க இணக்கம் தெரிவித்துள்ளார்கள். - என்றார்.

# வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் சம்மேளனம் அரசுக்கு ஆதரவாக ஐ.நா.முன் ஆர்ப்பாட்டம்!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்குத் தமது கண்டனத்தை வெளியிடும் வகையில் வடக்கு, கிழக்கு முஸ்லிம் சம்மேளனத்தினால் நேற்று திங்கட்கிழமை கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்துக்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட வடக்கு, கிழக்கு முஸ்லிம் சம்மேளத்தின் தேசிய அமைப்பாளர் இஸ்மன்.

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரால் அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. அவர் சிலி நாட்டின் முன்னாள் ஜனாதிபதியாவார்.

அவர் எமது நாட்டின் மூன்று தசாப்தகால யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவந்த இராணுவத்தினர் வெளிநாடுகளுக்குச் செல்வதைத் தடைசெய்வதற்கு முற்படுகின்றார்.

அவர்கள் எமது நாட்டின் உள்ளக விவகாரங்களில் தலையீடு செய்யவேண்டிய அவசியம் இல்லை. உள்ளகப்பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைப் பெறுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை ராஜபக்ஷ அரசாங்கம் மேற்கொள்ளும்.

மிச்சேல் பச்லெட் சிலி நாட்டின் ஜனாதிபதியாக இருந்தபோது, உள்ளகப் பிரச்சினைகளில் அங்கு பெரும் எண்ணிக்கையானோர் உயிரிழந்தார்கள். அவ்வாறிருக்கையில் தற்போது அவர் மனித உரிமைகள் தொடர்பில் பேசுகின்றார்.

எனவே இத்தகைய மிரட்டல்களுக்கு நாம் ஒருபோதும் அஞ்சமாட்டோம். இலங்கை தொடர்பான பிரேரணை மீது முன்னெடுக்கப்படவுள்ள வாக்கெடுப்பில் நாம் நிச்சயமாக வெற்றிபெறுவோம்.

ரஷ்யா, சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் எமக்கு ஆதரவு வழங்குவதற்கு முன்வந்திருக்கின்றன. அவ்வாறான நாடுகளின் துணையுடன் இந்தப் பிரேரணையை வெற்றிகொள்வோம் என்று குறிப்பிட்டார்.

மேற்படி கவனவீர்ப்புப்போராட்டத்தில் முடிவில் வடக்கு, கிழக்கு முஸ்லிம் சம்மேளனத்தின் சார்பில் ஐக்கிய நாடுகள் அலுவலக அதிகாரிகளிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கனகராயன் ஆற்று மண் அகழ்வு பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தும்!

## வட மாகாண ஆளுநர் தெரிவிப்பு

கிளிநொச்சி கனகராயன் ஆற்றில் மேற்கொள்ளப்படும் மணல் அகழ்வு எதிர்காலத்தில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் யாழ் மாவட்டம் உட்பட வடக்கு மாகாணத்தில் ஏனைய பிரதேசங்களிலும் குடிதண்ணீருக்கான தட்டுப்பாடு காணப்படுவதாகவும் வடக்கு மாகாண ஆளுநர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் கிளிநொச்சி - இரணைமடு குளத்தில் கனகராயன் ஆற்றுப்பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெறும் மணல் அகழ்வு எதிர்காலத்தில் நீர்த் தேக்கத்திற்கே பாதிப்பை ஏற்படுத்தும் என அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற ஒவ்வொருவரும் தங்களது எதிர்கால சந்ததியைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என்றும் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் கேட்டுக்கொண்டார்.

**வேலைவாய்ப்பு**

காலைக்கதிர் பத்திரிகைக்கு காலை, மாலை நேரப் பணியில் கடமையாற்ற பக்க வடிவமைப்பாளர் தேவை

தொடர்புகளுக்கு:- 077 307 8799

# காணாமற்போன மகனை தேடிய தந்தை சாவு!





வவுனியாவில் காணாமல்போன தனது மகனை தேடி வந்த தந்தை ஒருவர் சுகவீனம் காரணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை மரணமடைந்துள்ளார்.

வவுனியா விநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த கனகையா நஞ்சனாமூர்த்தி வயது 63 என்ற தந்தையே மரணமடைந்துள்ளார்.

இவரது மகன் செல்வநாதன் வயது 40 கடந்த 2007 ஆம் ஆண்டு தந்தைக்கு உணவு கொண்டு செல்லும் போது வவுனியாவில் வைத்து கடத்தப் பட்டிருந்தார்.

அவரைத் தேடி வவுனியாவில் கடந்த 1,495 நாள்களாக முன்னெடுக்கப்பட்டுவரும் சுழற்சிமுறை உணவு தவிர்ப்புப் போராட்டத்திலும் குறித்த தந்தை கலந்து கொண்டு தனது மகனை கண்டுபிடித்து தர போராடியிருந்தார். இந்நிலையில் மகனை காணாமலேயே அவர் மரண மடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**வீடு வாடகைக்கு உண்டு**

நல்லூர் கோவிலுக்கு அண்மையில் புதியவீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 0777977924

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.03.2021இல் வெளியிடப்பெற்றது.